[2009 ஜூலை 2

72—

தூர் வாரும் பணி

***5615—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையினைப் படிக்க தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.*

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் மற்றும் போரூர் ஆகிய ஏரிகளைப் பொறுத்தவரை, ஏற்கெனவே அவற்றின் கொள்ளளவை அதிகப்படுத்தியும், கரைகளைப் பலப்படுத்தியும் இருப்பதால், தூர் வார வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபுவுக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இன்றைக்கு மக்கள்தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால், சில நேரங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. எனவே, பூண்டி, புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, தண்ணீரின் கொள்ளளவைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் எனது விடையில் குறிப்பிட்டுள்ளதைப்போல அதனுடைய* original capacity-*யைவிட இப்போது நாம் அதிகப்படுத்தியிருக்கிறோம். பூண்டியைப்*

2009 ஜூலை 2]

பொறுத்தவரையில் 33 அடி F.R.L. இன்றைக்கு 35 அடி F.R.L. அதாவது கொள்ளளவு என்று பார்த்தால் பழைய கொள்ளளவு 2750 Mcft. இப்போது 3231 Mcft. செம்பரம்பாக்கத்தின் கொள்ளளவு அதனுடைய original capacity 22 அடி F.R.L. இன்றைக்கு 24 அடி F.R.L. அதன் கொள்ளளவினை அந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். புழலில் 19.2 அடி F.R.L. ஆனால், இன்றைக்கு 21.2 அடி F.R.L. சோழவரத்தில் 19 அடி, அதை ஒன்றும் செய்ய முடியாது. முன்பெல்லாம் பூண்டி, செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சோழவரம் ஆகிய இந்த நான்கு ஏரிகள்தான் தண்ணீர் கொடுக்கின்ற ஏரிகள். இந்த ஏரிகளிலே, முன்னால் மொத்தம் 9531 Mcftதான் கொள்ளளவு இருந்தது. அதைப் பலப்படுத்தி கொள்ளளவினை அதிகப்படுத்திய காரணத்தினால் 11076 Mcft. உயர்ந்திருக்கிறது. ஆகவே, இதற்கு மேலும் போய் அதற்குள்ளே தோண்டிக்கொண்டிருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னையைச் சுற்றியுள்ள குடிநீர் வழங்கும் பிரதான ஏரிகள் மற்றும் கால்வாய்களையும் சீர்படுத்தி, குடிநீர்த் தேவையை அதிகரிக்கவும், வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரைச் சேமிப்பதற்கும் நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்ன விடைதான் இதற்கும் பொருந்தும். இந்த ஏரிகளிலே அவ்வளவுதான் நிரப்ப முடியும். அவ்வளவுதான் கரையைப் பலப்படுத்த முடியும். சில இடங்களிலே நீர்க் கசிவு ஏற்படுகிறது என்பதால், அதன் கரையைப் பலப்படுத்த வேண்டும். பூண்டியிலேயும், புழலிலேயும் அதுபோல தண்ணீர் கசிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு gouting செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக 33 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தீட்டி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பியிருக்கிறோம். காரணம், இந்த ஏரியிலிருந்து எந்தவிதமான பாசனத்திற்கும் தண்ணீர் கிடையாது. எனவே, பொதுப் பணித் துறையினுடைய பராமரிப்பிலே அது வராது.

[2009 ஜூலை 2

முழுக்க முழுக்க குடிநீர் வடிகால் வாரியத்திற்குத்தான் இந்த ஏரிகள் பயன்படுவதால், பல நேரங்களில் அவர்கள்தான் இதைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே, கரைகளைப் பலப்படுத்துவதற்கு 33 கோடி ரூபாயை அனுப்பியிருக்கிறோம். மேலும், இந்த ஏரிகளிலே வருகிற தண்ணீர் போதாது என்பதற்காக, ஸ்ரீபெரும்புதூர், பிள்ளைப்பாக்கம், மணிமங்கலம் மற்றும் நேமம் ஆகிய அந்த ஏரிகளிலே இருக்கிற தண்ணீரையும், சென்னை மாநகரக் குடிநீருக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதோடு, மாதவரம், போரூர் ஏரிகளையும் ஏற்கெனவே நாங்கள் எடுத்திருக்கிறோம். எனவே, இந்த ஏரிகளிலும் தண்ணீரைத் தேக்கி, சென்னை மாநகரக் குடிநீருக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். மூன்றாவதாக, புழலோ, பூண்டியோ, dry-ஆகாது. அது dry-ஆனால்தான் தூர் வாருவதற்கு முடியும். அதிலே எப்போதும் தண்ணீர் இருக்கும். இரண்டாவது, பூண்டியில் மட்டும்தான் இரண்டு ஆறுகள் வந்து சேரும். புழலில் அதுகூட சேராது. கால்வாய்மூலமாகத்தான் தண்ணீர் வந்து சேருகிறது. எனவே silt சேருகிறது என்றால் அது பூண்டியில்தான். ஆனால், அந்த அளவிற்கு அங்கு silt இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.*

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கம் ஏரியைப் பொறுத்தவரையிலும் 22 அடியிலிருந்து 24 அடியாக உயர்த்தப்பட்ட பிறகும், மழைக் காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் அதிகமாக வழிந்தோடுவதோடு மட்டுமல்லாமல், அங்கே 24 அடிக்கு மேலே வருகிறபோது, திறந்துவிடுகின்ற காரணத்தினாலேயும், அங்கு பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அரசும் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு, செட்டிப்பேடு வரையில் அதனுடைய இடம் இருக்கிறது. அங்கேயும் கொஞ்சம் தண்ணீர் திட்டுத் திட்டாக இருக்கிறது. ஆகவே, செட்டிப்பேடு வரையில் அதன் அகலத்தை அதிகமாகத் தூர் வாரி இன்னும் அதிகமான நீரைத் தேக்கி வைத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

2009 ஜூலை 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரியினுடைய மதகுபுறத்திலே தூர் வார முடியாது. மண் எடுக்க முடியாது. ஏனென்றால் sluice-ஐவிடக் கீழே போய்விடும். ஆனால்--forefront--அதனுடைய கடைசி எல்லையிலேதான் மண் வாரலாம். மேலும், இப்பொழுது போட்டிருக்கின்ற Highways-இனுடைய ரோட்டிற்கு எல்லா ஏரிகளில் இருந்தும் மண்ணை வாரிவிட்டார்கள். ஆகையினால் தண்ணீர் இப்பொழுது எங்கே போகிறது என்று கேட்டால், ஏரியினுடைய பின்பகுதிக்குப் போகிறதே தவிர, அதன் மதகுப் பகுதிக்குத் தண்ணீர் போக முடியவில்லை. Highways-இல் போட்டிருக்கின்ற எல்லா ரோட்டிற்கும் ஏரி மண்தான் போடப்பட்டுள்ளது.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் அருகிலேயிருந்து, அணைக்கட்டில் பம்பை வாய்க்கால் ஒன்று உருவாகி, அந்த வாய்க்கால் வழியாகப் பல ஏரிகளுக்குத் தண்ணீர் அனுப்பப்படுகிறது. அந்த வாய்க்கால், கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தூர் வாரப்படாமல், தூர்ந்துபோய் இருக்கின்றது. நீர் செல்வதற்கு வழியில்லாமல் எங்கள் கிராமத்தின் அருகேயிருக்கின்ற 15 கண் என்கின்ற இடத்திலே, அந்த நீர் தென்பெண்ணையாற்றிலே கலந்து, வீணாகிக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று, அந்த நீர் செல்கின்ற வழியிலே இருக்கின்ற எங்கள் கிராமத்தின் சாலையும் அடித்துச் செல்லப்படுகின்றது. இதைத் தவிர்க்கின்ற வகையிலே, அந்த வாய்க்காலைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வாய்க்கால் 40 ஆண்டுக் காலமாக தூர்ந்துபோய், கரைகளை அரித்து, சாலைகளை அரித்து, வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகின்ற பெரும் அபாயத்தை, 3 ஆண்டுகளாக ஏற்படுத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்காமல் விட்டுவிட்டு இருக்கிறார். அவ்வாறில்லாமல்

உடனடியாக ஒரு கேள்வியைப் போட்டிருந்தால் முழு விவரத்தைத் தந்திருக்கலாம். இதற்குத் துணைக் கேள்வி போதாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு முக்கியமான குடிநீர் ஆதாரமாக, வீராணம் ஏரியிலிருந்து வந்துகொண்டிருந்த நீர், நிறுத்தப்பட்டிருக்கிறது. வீராணம் ஏரி இப்பொழுது முழுவதுமாக வறண்டு இருக்கிறது. அங்கு என்னுடைய தொகுதியிலேயிருந்து 54 Bore-wells மூலமாக பம்ப் செய்து சென்னைக்குத் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டு வீராணம் ஏரியில் நீர் முழுவதுமாக வற்றிவிட்டது. அதை ஆழப்படுத்துவதற்கும், அதன் கரைகளைப் பலப்படுத்துவதற்கும், அணையை உயர்த்துவதற்கும் ஒரு நல்ல சூழல் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே ஒரு கேள்வியின்போது, நீர் இருக்கிறதென்று சொன்னார். இப்பொழுது நீர் வறண்டிருக்கின்றது. வீராணம் ஏரியை ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி, பலப்படுத்தி, அங்கேயிருக்கின்ற விவசாயிகளுக்கு நீர் தருவதற்கு அதன் கொள்ளளவை உயர்த்துவதற்குமான நடவடிக்கையை அமைச்சர் எடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை நான் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். இப்படிப்பட்ட ஏரிகளை, Dam-களைத் தூர் வாருவது என்பது ஒரு myth - அது முடியாது. மதகு வழியாகத்தான் மறுபடியும் அந்த silt வெளியே போகும். அதை ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்பது நம்முடைய சட்டமன்றத்தில் மட்டும் கேட்கிற ஒரு தத்துவமே தவிர, உலகம் பூராவும் எங்கேயும் கிடையாது. ஆனாலும், அதன் கரைகளைப் பலப்படுத்தலாம். சில நேரங்களில் கரைகள் சரிந்துபோய்விடுகின்றன. ஏற்கெனவே அதுபோல பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கே Forefront-ல் உள்ள தண்ணீரை எடுத்து இந்தப் பக்கம், அதாவது மீன்சுருட்டி பக்கம் கொண்டு வருகிற அந்தச் சாலை வரையிலே மண்ணை எடுத்துப் பின்னாலே

2009 ஜூலை 2]

கொட்டி, கரையின் பின்பகுதியைப் பலப்படுத்தியிருக்கிறோம். ஆகையினால், அதன் மையத்திலே ஆழப்படுத்துகிற மண்ணைக்கூட பாதி எடுத்துப்போட்டிருக்கிறோம். இனிமேல் அதிலே எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காவிரியில் தண்ணீர் இல்லை. மழையை நம்பித்தான் இருக்க வேண்டியுள்ளது. மழை நீரைச் சேகரிக்க வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் நிறைய ஏரிகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வாரி, ஏரிகளைப் பலப்படுத்துகின்ற திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பலமுறை நான் தெரிவித்துவிட்டேன். ஏரிகளைப் பாதுகாப்பதற்காக, ஒரு சட்டத்தை இந்த மாமான்றத்தின் உறுப்பினர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறீர்கள். அதன் அடிப்படையிலே, பல பகுதிகளிலே ஏரிகளின் ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியிருக்கிறோம். இங்கேயிருக்கின்ற உயர் நீதிமன்றத்தில்கூட 29 ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே, ஆக்கிரமிப்புகளைப் போய் அகற்றினோம். திருநின்றவூரில் எடுத்தோம். தாம்பரத்தில் பெரிய ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினோம். ஆனால், அரசியல் கட்சிகள் பயங்கரமான ஆர்ப்பாட்டம், பெரிய ஊர்வலம், உண்ணாவிரதம் நடத்தினார்கள். அங்கிருக்கிற மக்களைத் தூண்டி விட்டார்கள். சரி, என்ன செய்வது என்று கொஞ்சநாள் அந்தப் பணியை நிறுத்தி பார்த்தோம். மறுபடியும், ஆக்கிரமிப்புகள். ஏற்கெனவே இருக்கின்றவர்களை அகற்ற முடியவில்லை; நம்மை என்ன செய்யப் போகிறார்கள் என்ற தைரியத்தில் பலர் கரையோரம் வீடு கட்டிக்கொண்டு உள்ளே வந்திருக்கிறார்கள். 'என்னை எடுத்தால் அவர்களை எடு' என்கிறார்கள். ஆகையினால், சட்டத்தால் மட்டும் இதிலே இருக்கிற இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது.

[2009 ஜூலை 2

முற்பகல் 9-45

அரசியல் கட்சிகளும், அந்தக் கிராமத்தில் இருக்கிற மக்களும் ஒத்துழைக்க வேண்டும். இப்படி எல்லாவற்றுக்கும் நீர்நிலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பக்கத்திலே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறோம்; ஒரு பக்கத்திலே நிலத்தடி நீரைச் சேகரிக்க வேண்டும் என்று தத்துவம் பேசுகிறோம். அந்த நீர் தேங்கி இருக்கிற நிலையை ஆக்கிரமிப்பது இன்னொரு வகையில். ஆக, இரண்டுக்கும் முரண்பாடு இருக்கிறது. ஆகையினாலேதான் இந்த அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி, ஒரு சட்டத்தை உருவாக்கி இருக்கிறது. மாண்புமிகு வைத்திலிங்கம் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அங்கே கல்லைப் போட வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்னால்கூட செங்கல்பட்டு பக்கத்திலே ஜானகிபுரம் என்ற ஓர் ஊர்; அங்கே போய்ப் பார்த்தால், பாதி செங்கல் சூளைகள், பாதி வீடுகள். அவற்றை அகற்றிவிட்டு, கல்லைப் போட்டுவிடச் சொல்லி அனுப்பினேன். ஆனால், அங்கே போனால் ஊரே படையெடுத்து நிற்கிறது. சோழிங்கநல்லூரிலே ஏரிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே சில பேர், கம்பெனிகாரர்கள் ரோடே போட்டுவிடுகிறார்கள். அதை நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. எடுக்கிறபோது, பஞ்சாயத்துக்காரர்கள் தகராறுக்கு வருகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இந்த அரசுக்கு, திடமாக ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது. எனவே, அரசியல் கட்சிகள் முதலிலே ஒத்துழைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரினுடைய குடிநீர் ஆதாரமாக 5 ஏரிகள் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கொள்ளளவிற்குக் கூடுதலாக நீர் சேகரிக்கப்பட்டாலும், கடந்த டிசம்பர் மாதம் சென்னை மாநகரத்திலே பெய்த மழையின் காரணமாக ஒரு கடுமையான வெள்ளச் சேதம் சென்னை மாநகரத்தில் ஏற்பட்டது. 5 மாதங்களுக்குப் பின்பு, இன்றைக்கு சென்னையில் மீண்டும் குடிநீர்ப் பிரச்சினை வந்துவிடுவதற்கான வாய்ப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மழை கூடுதலாகப் பெய்யக்கூடிய காலத்தில் அல்லது சராசரியாக மழை பெய்யக்கூடிய

2009 ஜூலை 2]

காலத்திலே கிடைக்கக்கூடிய அந்த மழை நீரைச் சேகரித்து வைப்பதற்கு இரண்டு ஏரிகள் கூடுதலாக எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய ரெட்டேரியும் அதிலே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டேரியும், மாதவரம் ஏரியும் எங்களுக்கும் முக்கியம்தான். ஏனென்று கேட்டால், ரெட்டேரியிலே தண்ணீர் தேக்கி வைப்பது சரியாக இல்லை என்றால், அது உடைந்து தணிகாசலம் நகர் வரை உள்ள பகுதியை வெள்ளக் காடாக்குவது எனக்குத் தெரியும். ஆகையினாலே அதையும் நிச்சயமாக எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கான முயற்சிகளிலே ஏரிகள், குளங்கள் தூர் வாரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆக்கிரமிப்புகள் குறித்தும் சொல்லியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலும், நீர்நிலைகளாக இருக்கிற அந்தப் பகுதிகளிலே ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதே தவிர, வேறு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், நீர்நிலைகளே இல்லாதபொழுது, அதை ஆக்கிரமிப்பாகக் கொள்ள வேண்டியதில்லை என்ற ஒரு கருத்தைத்தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். அதுபற்றிக்கூட எங்களைக் கூப்பிட்டு விவாதித்தால், அதன்மீது நல்ல கருத்துகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை எடுக்கலாம் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வதோடு, திருவாரூர் மாவட்டத்திலே மிகப் பெரிய ஏரியாக இருக்கக்கூடிய திருமக்கோட்டை திருமேனி ஏரியைப்பற்றித் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே, தொடர்ந்து தூர் வாரி, அதன் கரைகளைப் பலப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். அதற்கு திட்ட மதிப்பீடு தயாரித்து அனுப்பப்பட்டிருக்கிறது; இந்த ஆண்டு அறிவிக்கப்படும் என்று

மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அன்றைய தினம் நேரம் போதவில்லையோ என்னவோ தெரியவில்லை, தங்களுடைய மானியத்தில்; இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாக, அரசியல் கட்சிகள் ஆக்கிரமிப்பை அகற்றுவதிலே ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னேன். உடனே, பூனைக்குட்டி வெளியே வந்ததைப்போல், சிவபுண்ணியம் அவர்கள் நீர் இல்லாத பகுதியிலே கட்டியிருப்பதைதானே நாங்கள் சொல்கிறோம் என்றார். இப்பொழுது போய் பார்த்தீர்களென்றால், கோடையிலே எல்லா ஏரிகளும் நீர் இல்லாமல்தான் இருக்கும். அங்கேதான் கட்டிக்கொண்டிருப்பார்கள். நீர் வந்தவுடனே என்ன சொல்வார்களென்றால், வெள்ளத்திலே மூழ்கிவிட்டோம், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்வார்கள். ஆகவே, காய்ந்த காலத்திலே வீடு கட்டவேண்டியது; மழை பெய்த காலத்திலே காப்பாற்ற வேண்டியது. ஆகையினாலேதான் இந்த நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

சொகுசுப் பேருந்து

***47675—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லிலிருந்து வேலூர் செல்ல சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தடம் எண் 981, திருச்செந்தூரிலிருந்து திருப்பதி, திண்டுக்கல், வேலூர் வழியாக தினசரி